Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 05 (19-01-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 335

## இலங்கை திரும்புவோருக்கு தற்காலிக அடையாள அட்டை

இந்திய அரசினால் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படும் அகதிகளுக்குத் தற்காலிக அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. இம்மாதம் இருபத்திரெண்டாம் திகதி இந்தியாவிலிருந்து முதலாவது தொகுதி அகதிகள் 750 பேர் ''அக்பார்'' என்னும் கப்பலில் திருக்கோணமலைக்கு வருவர் எனவும், இவர்களுக்கு அவரவர்வீடுகளைத்திருத்தி அமைக்க உதவிகள் வழங்கப்படுமெனவும் தெரிவித்த புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் தற்காலிக அடையாள அட்டையும் வழங்கப்படும் எனக் கூறினார்.

# சிறிலங்காவின் யுத்த முஸ்தீபுகள்: மேற்குலக நாடுகள் அதிருப்தி

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு கதவடைத்துவிட்டு யுத்த முஸ்தீபுகளைச் செய்துவருவது குறித்து மேற்குலக நாடுகள் அதிருப்தி கொண்டிருப்பதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் எழுந்த பேச்சுவார்த்தைக்கான சமரச சூழ்நிலை குழம்பியுள்ளது குறித்து இந் நாடுகள் ஏமாற்றம் அடைந்துள்ளதாக இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வு காணப்படவேண்டும் என்பதும் இராணுவ அணுகுமுறைவாயிலாக இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதும் மேற்குலக நாடுகளின் நிலைப்பாடாகும். இந்நிலைப்பாட்டையே இந் நாடுகள்சிறிலங்கா அரசாங்கத்திடம் வலியுறுத்தி வந்துள்ளன. இதன் அடிப்படையிலேயே சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்துவம்வகிக்கவும் முன்வந்தன அதேவேளை அமைச்சர் தொண்டமானின் சமரஸ முயற்சிக்கு சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள்பகிரங்க ஆதரவைத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சூழ்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கம் ஆப்பு வைத்து

( 3ஆம் பக்கம் பார்க்க)

## 'லில்லி' கப்பலில் பாடப்புத்தகம்

(கொழும்பு)

லில்லி கப்பலில் 250 மெற்றிக் தொன் இலவசப்பாடப் புத்தகங்களும், 3200 மெற்றிக் தொன அரிசி, சீனி, மா, பால்மா உணவு, தேயிலை என்பன அனுப்பிவைக்கப்படவுள்ளன. இக்கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதி அளவில் கொழு

( 3ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு ஒருவர் பலி

வவுனியா-மன்னார் வீதியில் சிறிலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவர் பலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் அனர்த்தங்களுக்கு அரசியல்கட்சிகளே காரணம் -பிரேமதாசா

(காலி)

சுதந்திரத்தின் பின் எமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு அரசியல் கட்சிகளே காரணம் என களுத்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிறிலங்கா ஜானாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அதிகாரப் பரவலாக்கல் மூலமே நாட்டின் அபிவிருத்தியில் வெற்றி காண முடியும் எனவும் தெரிவித்தார்.

## லலித் குடியுரிமை பறிப்பு; அரசு ஆலோசிக்கவில்லை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி உட்பட எட்டு ஐ. தே. க. அதிருப்தியாளர்களின் குடியியல் உரிமையை பறிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துலத் முதலியை மகாபொல பணிப்பாளர் பொறுப்பிலிருந்து அகற்றுவது பற்றியும் அரசாங்கம் ஆலோசிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

## காமினியை விடுவிக்குக; ரிட்மனு நிராகரிப்பு

(கொழும்பு)

பேராசிரியர் சால் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில் முதலாவது எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவை விடுவிக்கக் கோரி தாக்கல் செய்த ரிட் மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இவ்வாறான மனுவினை இக்கட்டத்தில் விசாரிக்கஎந்த வித சட்டவிதியும் இல்லை என நீதிபதி உணம்புவ தெரிவித்து நேற்றுமுன்தினம் இம்மனுவை நிராகரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கடல் நீரேரியில் கைதான இளைஞர் தப்பிவந்தார்

(கொடிகாமம்)

பூநகரிக்கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இருவர் கடல் நீரேரியில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது. கச்சாய் தெற்கைச் சேர்ந்த மயிலு கந்தையா(51) என்பவரையும், வள்ளத்தையும் விடுவித்த சிறிலங்கா இராணுவத்தினர் குமாரசாமி சிறீதரன் (18) என்ற இளைஞரை முகாமிற்குக் கொண்டுசென்றனர்,

முகாமில் தம்மீது கடும் சித்திரவதை மேற்கொள்ளப்பட்டது எனவும், மறுநாள் கடலில் பாய்ந்து தப்பி நீந்திக்

( 3ஆம் பக்கம் பார்க்க)

## மங்களமுனசிங்கா யாழ். வர விருப்பம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பியுமான திரு. மங்களமுனசிங்கா யாழ்ப்பாணம் விஜயம்

இவ்விஜயத்தின்மூலம் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அறியவும், யாழ்ப்பாணத்துச் சூழ்நிலையை நேரில் தெரிந்துகொள்ளவும்

குறித்து ஒரு தனிநபர் ஊடாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொள்வதற்குமுயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

## வாவியில் படகு கவிழ்ந்து

லில்லி கப்பலில் 250 மெற்றிக் தொன் இலவசப்பாடப் புத்தகங்களும், 3200 மெற்றிக் தொன அரிசி, சீனி, மா, பால்மா உணவு, தேயிலை என்பன அனுப்பிவைக்கப்படவுள்ளன. இக்கப்பல் எதிர்வரும் 22 ஆம் திகதி அளவில் கொழு

( 3ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் அனர்த்தங்களுக்கு அரசியல்கட்சிகளே காரணம் -பிரேமதாசா

(காலி)

சுதந்திரத்தின் பின் எமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு அரசியல் கட்சிகளே காரணம் என களுத்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிறிலங்கா ஜானாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அதிகாரப் பரவலாக்கல் மூலமே நாட்டின் அபிவிருத்தியில் வெற்றி காண முடியும் எனவும் தெரிவித்தார்.

## லலித் குடியுரிமை பறிப்பு; அரசு ஆலோசிக்கவில்லை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி உட்பட எட்டு ஐ. தே. க. அதிருப்தியாளர்களின் குடியியல் உரிமையை பறிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துலத் முதலியை மகாபொல பணிப்பாளர் பொறுப்பிலிருந்து அகற்றுவது பற்றியும் அரசாங்கம் ஆலோசிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

## காமினியை விடுவிக்குக; ரிட்மனு நிராகரிப்பு

(கொழும்பு)

பேராசிரியர் சால் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில் முதலாவது எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவை விடுவிக்கக் கோரி தாக்கல் செய்த ரிட் மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இவ்வாறான மனுவினை இக்கட்டத்தில் விசாரிக்க எந்த வித சட்டவிதியும் இல்லை என நீதிபதி உணம்புவ தெரிவித்து நேற்றுமுன்தினம் இம்மனுவை நிராகரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பாரிஸில் ஆட் கடத்தல்; இலங்கை இளைஞர் கைது

(பாரிஸ்)

பாரிஸில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் வேலாயுதம் லோகேந்திரன் என்ற 19 வயது இளைஞனை இலங்கையைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டி ஒன்று கடத்திச் சென்றுள்ளது.

இக் கடத்தல் குற்றச் சாட்டில் ஈடுபட்ட சுமார் பத்துப் பேரை ஜேர்மனியைச் சேர்ந்த கார்ட் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்ட விரோத குடியேற்ற நடவடிக்கைகளையே இந்தக் கும்பல் செய்து வந்ததுஎனவும் இவர்களின் உதவியுடனேயே லோகேந்திரன் பாரிஸ் வந்ததாகவும் இதற்குரிய முழுப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நோக்கிலமைந்த வரலாற்று நூல்

(யாழ்ப்பாணம்)

மு. திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய ''இலங்கை இனப் பிரச்சினையின் அடிப்படைகள்'' என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது.

சு. இராசநாயகம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் இனப் பிரச்சினையை புதிய நோக்கில் யதார்த்த பூர்வமாக இந்த நூல் ஆராய்கிறது என்றும், கடந்த காலத்தில் இதுபோன்ற நூல்கள் வெளிவராததையிட்டு கவலையும் தெரிவித்தார்.

தொடர்ந்து திரு. ரவி வெளியீட்டு உரை நிகழ்த்தும்போது நீண்ட வரலாறு கொண்ட இனப்பிரச்சினையினை வித்து முதல் வேர் வரை விரிவாக இந்தநூல் ஆராய்கின்றது என்

(3 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு கதவடைத்து விட்டு யுத்த முஸ்தீபுகளைச் செய்துவருவது குறித்து மேற்குலக நாடுகள் அதிருப்தி கொண்டிருப்பதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் எழுந்த பேச்சுவார்த்தைக்கான சமரச சூழ்நிலை குழம்பியுள்ளது குறித்து இந் நாடுகள் ஏமாற்றம் அடைந்துள்ளதாக இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வு காணப்படவேண்டும் என்பதும் இராணுவ அணுகுமுறைவாயிலாக இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதும் மேற்குலக நாடுகளின் நிலைப்பாடாகும். இந் நிலைப்பாட்டையே இந் நாடுகள்சிறிலங்கா அரசாங்கத்திடம் வலியுறுத்தி வந்துள்ளன. இதன் அடிப்படையிலேயே சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்துவம்வகிக்கவும் முன்வந்தன அதேவேளை அமைச்சர் தொண்டமானின் சமரஸ முயற்சிக்கு சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள்பகிரங்க ஆதரவைத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சூழ்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கம் ஆப்பு வைத்து

( 3ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு ஒருவர் பலி

வவுனியா-மன்னார் வீதியில் சிறிலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவர் பலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் நீரேரியில் கைதான இளைஞர் தப்பிவந்தார்

(கொடிகாமம்)

பூநகரிக்கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இருவர் கடல் நீரேரியில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது. கச்சாய் தெற்கைச் சேர்ந்த மயிலு கந்தையா(51) என்பவரையும், வள்ளத்தையும் விடுவித்த சிறிலங்கா இராணுவத்தினர் குமாரசாமி சிறீதரன் (18) என்ற இளைஞரை முகாமிற்குக் கொண்டுசென்றனர்,

முகாமில் தம்மீது கடும் சித்திரவதை மேற்கொள்ளப்பட்டது எனவும், மறுநாள் கடலில் பாய்ந்து தப்பி நீந்திக்

( 3ஆம் பக்கம் பார்க்க)

# மங்களமுனசிங்கா யாழ். வர விருப்பம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பியுமான திரு. மங்களமுனசிங்கா யாழ்ப்பாணம் விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கவிருப்பம் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின்மூலம் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறியவும், யாழ்ப்பாணத்துச் சூழ்நிலையை நேரில் தெரிந்துகொள்ளவும் திரு. மங்களமுனசிங்கா ஆவல் தெரிவித்துள்ளார்

தமது உத்தேச விஜயம் குறித்து ஒரு தனிநபர் ஊடாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொள்வதற்குமுயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

## வாவியில் படகு கவிழ்ந்து அதிபர் உட்பட மூவர் பலி

மட்டக்களப்பு வாவியில் படகு கவிழ்ந்ததால் அதில் பயணம் செய்த மூவர் பலியாகினர். இப்பரிதாப சம்பவம் கடந்த 15 ஆம் திகதி நிகழ்ந்தது.

மண்டூர் மகாவித்தியாலய

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு

## கப்பலில் வந்தபொருள்கள் விற்பனை விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட பின்வரும் பொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளர்களுக்கு குறித்த விலையில் விற்க வேண்டும் என்று ப.நோ.கூ சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், நுகர்ச்சி முகாமையாளர்கள் ஆகியோர் கூ. உ. ஆணையாளர்கள் செ. லிங்கநாதன் தலைமையில் கூடிய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. 20-01-92 முதல் அமுலுக்கு வரவிருக்கும் விலை விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ அரிசி | 1 கிலோ | 20.00ரூபா |
| ★ மா | ,, | 18.00 ,, |
| ★ சீனி | ,, | 34.00 ,, |
| ★ பருப்பு | ,, | 58.00 ,, |
| ★ சன்லைற் சிறிது | | 7.50 ,, |
| ★ சன்லைற்பெரிது | | 11.00 ,, |
| ★ லைபோய் | | 8.50 ,, |
| ★ லக்ஸ் | | 9.00 ,, |
| ★ றெக்சோனா | | 8.00 ,, |
| ★ சிநோவைற் | | 7.50 ,, |

( 3ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலையில் ஒரு ரெலோ பலி

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சமூக விரோதிகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

### உலக ஒருமைப்பாட்டு மன்றம்

# இனப்பிரச்சினை தீர்விற்கு பூர்வாங்க திட். முன்வைப்பு

உலக ஒருமைப்பாடு மன்றத்தின் சிறிலங்காக் குழு இனப்பிரச்சினைக்கான பூர்வாங்க தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. பௌத்த, இந்து, கிறிஸ்தவமற்றும் இஸ்லாமிய மதகுருக்கள், அரசியல் கட்சிகளின்பிரதிநிதிகள், பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் புத்திஜீவிகள், இத் தீர்வுத் திட்டத்தில் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றுசேர்ந்து சாந்தியும் சமாதானமும் நிலவ உதவுமாறு அத்தீர்வுத் திட்டத்தில் கோரப்பட்டுள்ளது,

பின்வரும் ஆலோசனைகள் அத்தீர்வுத் திடடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

★ யுத்தத்தை நிறுத்துதல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மங்களகர திறப்புவிழா

யாழ். நகர மத்தியில்
மின் நிலைய வீதியில்
மரக்கறி - நியாய விலைக்கடை

## பசுஞ்சோலை



20 - 01 - 1992 காலை 9.45 மணிக்கு மங்களகரமாக திறந்து வைக்கப்படும்.

பசுஞ்சோலை
மின் நிலைய வீதி,
(சுவையருவி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(சி/3810)



மகிழ்ச்சிகரமான ஆரம்பம்

யாழ்ப்பாணம்

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

- வானவில் விற்பனையகம்
- பதிப்பகம் (புதுப் பொலிவுடன்)

20-01-1992 திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு 259, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நிலையத்தில்,

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உயர்திரு. செ. லிங்கநாதன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

- ★ பாடசாலை உபகரணங்கள், சீருடைகள்
- ★ புடைவைகள் மற்றும் ஆடைகள்
- ★ பாட்டா றபர் பாதணிகள்
- ★ சவர்க்கார வகைகள், சலவைப் பவுடர்கள், நுளம்புத் திரி
- ★ பாண் தயாரிப்பு பொருள்கள்
- ★ மிதி வண்டி ரயர், ரியூப்
- ★ பால்மா வகைகள்
- ★ மற்றும் ஏனைய நுகர்ச்சிப் பொருள்கள்
- ★ பதிப்பக சேவைகள், மனநிறைவிற்குண்டு

உங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

யாழ். ப. நோ. கூ. சங்கம் - வ. து.
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
18-01-1992

(சி/3809)




## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இராசு விநாயக மூர்த்தி என்பவரது அடையாள அட்டை (இல. 652643302V) சாவகச்சேரிக்கும் இயக்கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் செல்வம் கூல்பார் சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

(2111)

## கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிறு தோறும் இடம் பெறும் வாராந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை (19.1.92) காலை 10.00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள கலை பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்வார அமர்வில் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் ''எனது இலக்கிய வாழ்க்கை'' என்னும் பொருளில் கருத்துரையாற்றவுள்ளார்.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(A/L கலை, வர்த்தக வகுப்பிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

93 பிரிவு --- 2
ஆரம்பம்: இன்று
(19-01-1992)


எமது தனித்துவம் வாய்ந்த
ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | திரு. கலாகரன் |
| வர்த்தகவியல் | - | திரு. தேவராஜா (தேவா) |
| கணக்கியல் | - | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | - | திரு. சுப்பிரமணியம் |
| இ. நாகரிகம் / இ. சமயம் | ) | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | - | திரு. குழந்தைவேல் |
| புவியியல் | - | திரு. குணராஜா |
| அரசியல் / வரலாறு | ) | திரு. சீலன் |

மு. குறிப்பு:-
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி/3811)


## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்




# முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப் போல் ஒரு சில நபர்களால் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறிய வந்துள்ளோம். அசல் ஆர். வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம். போலி பீடி விற்பனையாளர் பற்றிய

தகுந்த தகவல் தருபவர்களுக்கு
தக்க சன்மானம் வழங்கப்படும்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2099)


# நினைவு கூருகின்றோம்
## 1992 - 01 - 19

பாரூக்



1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் இருதயபுரத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**லெப். கலா** (ச. ஜெயராஜ் - தாண்டவன்வெளி, மட்டக்களப்பு)

**லெப். அரசன்** (க. சகாயராசா - இருதயபுரம் மட்டக்களப்பு)

**தாசன்** (டொமினிக் ஜேசுதாசன் - மட்டக்களப்பு)

**ராஜ்** (நித்தியானந்தன் ராஜ்குமார் - மட்டக்களப்பு)

இதே சம்பவத்தில் வீடுகளில் பூட்டி எரிக்கப்பட்டும், சுட்டும் கொல்லப்பட்ட 30 பொது மக்கள்

நிலாவெளியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது காயமுற்று யாழ்ப்பாணத்தில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய

**பாரூக் ' சாள்ஸ்** (சிங்கராசா மரியதாஸ் - லிங்கநகர் திருக்கோணமலை)

ஏழாலையில் சிறிலங்காப் படையினரால் சுடப்பட்டு காயமுற்று மரணமான உடுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞன்

1987 ஆம் ஆண்டு திருநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

❋ வானவில் விற்பனையகம்

❋ பதிப்பகம் (புதுப் பொலிவுடன்)

20-01-1992 திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு 259, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நிலையத்தில்,

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
உயர்திரு. செ. லிங்கநாதன் அவர்களால்
ஆரம்பித்து வைக்கப்படும்.

- ★ பாடசாலை உபகரணங்கள், சீருடைகள்
- ★ புடைவைகள் மற்றும் ஆடைகள்
- ★ பாட்டா றபர் பாதணிகள்
- ★ சவர்க்கார வகைகள், சலவைப் பவுடர்கள், நுளம்புத் திரி
- ★ பாண் தயாரிப்பு பொருள்கள்
- ★ மிதி வண்டி ரயர், ரியூப்
- ★ பால்மா வகைகள்
- ★ மற்றும் ஏனைய நுகர்ச்சிப் பொருள்கள்
- ★ பதிப்பக சேவைகள், மனநிறைவிற்குண்டு

உங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

யாழ். ப. நோ. கூ. சங்கம் - வ. து.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
18-01-1992

(உ/3809)

---

## யாழ்ப்பாணம் மாநகரசபை

## கூறுவிலை அறிவித்தல்
## 1992

யாழ்ப்பாண மாநகரசபையினால் நிர்வகிக்கப்படும் மகப்பேற்று நிலையத்தில் சேரும் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கூறுவிலைகள் 31-01-92 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கூறுவிலைப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16.01.92

(சி,3808)

---

(19-01-1992)

எமது தனித்துவம் வாய்ந்த
ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | திரு. கலாகரன் |
| வர்த்தகவியல் | - | திரு. தேவராஜா (தேவா) |
| கணக்கியல் | - | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | - | திரு. சுப்பிரமணியம் |
| இ. நாகரிகம் ) இ. சமயம் ) | | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | - | திரு. குழந்தைவேல் |
| புவியியல் | - | திரு. குணராஜா |
| அரசியல் ) வரலாறு ) | | திரு. சீலன் |


❋ மு. குறிப்பு:-

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி/3811)

---

## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



அமரர்
## ஆறுமுகம் ஈசன்

தோற்றம்
18-7-1958

மறைவு
25-8-1991

எங்கள் குடும்பத்தில் இளையவனாகப்பிறந்து கடல் கடந்து திரவியம் தேடி எம்மை மிளிர வைத்த தெய்வமே. மனைவி பிள்ளையைக்காணும் அவாவோடு போகும் வழியில் காலன் உம்மைக் கவர்ந்து சென்றதேனோ.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

அன்புத்தாய் தந்தை சகோதரர்கள்,
மனைவி, பிள்ளை, மச்சான்
மச்சாள்மார், மருமக்கள், மக்கள்

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(2115)

---

1992 - 01 - 19

( பாரூக்



1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் இருதயபுரத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**லெப். கலா** (ச. ஜெயராஜ் - தாண்டவன்வெளி, மட்டக்களப்பு)

**லெப். அரசன்** (க. சகாயராசா - இருதயபுரம் மட்டக்களப்பு)

**தாசன்** (டொமினிக் ஜேசுதாசன் - மட்டக்களப்பு)

**ராஜ்** (நித்தியானந்தன் ராஜ்குமார் - மட்டக்களப்பு)

இதே சம்பவத்தில் வீடுகளில் பூட்டி எரிக்கப்பட்டும், சுட்டும் கொல்லப்பட்ட 30 பொது மக்கள்

நிலாவெளியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது காயமுற்று யாழ்ப்பாணத்தில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய

**பாரூக் 'சாள்ஸ்** (சிங்கராசா மரியதாஸ் - லிங்கநகர் திருக்கோணமலை)

ஏழாலையில் சிறிலங்காப் படையினரால் சுடப்பட்டு காயமுற்று மரணமான உடுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞன்

1987 ஆம் ஆண்டு திருநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**ஜெயசீலன்** (கந்தையா மனோகரன் - சிவநகர், உருத்திரபுரம்)

இதே ஆண்டு சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் காயமுற்று வீரச்சாவெய்திய

**சாள்ஸ்** (மகாதேவன் மணிவண்ணன் - 'மிதிலை' அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

சுண்டிக்குளத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்

1990 ஆம் ஆண்டு வசாவிளானில் வீரச்சாவெய்திய

**ஜெயந்தன்** (நாகமுத்து யோகராசா - புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்)

1991 ஆம் ஆண்டு வவுனியா குருமண்காடு சிறிலங்காப்படையினரின் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய

**லவன்** (தர்மலிங்கம் யோகராசா - விளாத்திக்குளம் வவுனியா)

**நிக்சன்** (கணேஷ் ஜெயதாசன் - கண்டிவீதி, ஓமந்தை வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3805)

✲ சிந்தனைக்கு ✲

மீறுவதற்காக இயற்றப்பட்டவையே, சட்டங்கள்.

— கிறிஸ்டப்பர் நார்த்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 19-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# சட்டம் தனக்கில்லை என்கிறது இராணுவம்

1991 ஆம் ஆண்டு யூன் மாதம் கொக்கட்டிச்சோலையில் நடந்த படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க சிறிலங்காப் படையினர் மறுத்துள்ளார்கள். விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு 21 பேருக்கு அனுப்பப்பட்ட கட்டளைக்கு 17 பேர் சமுகம் கொடுத்தனர். ஆனால் அவர்கள் சாட்சியமளிக்க மறுத்தனர். ஒரு அதிகாரி மட்டும் சத்தியப் பிரமாணம் செய்யாமல் சாட்சியம் அளித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினரின் இச்செயற்பாடானது அவர்களின் எதேச்சாதிகாரப் போக்கையும் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளையும் காட்டுவதாக உள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவை இராணுவத்தினர் உதாசீனம் செய்ததன் மூலம் சிறிலங்கா அரசியலில் தமது பலத்தை வெளிக்காட்டியுள்ளனர். இந்த ஆணைக்குழு முப்படைகளின் தளபதியான சிறிலங்கா ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவை இராணுவத்தினர் உதாசீனம் செய்வதென்பது சிறிலங்கா ஜனாதிபதியை உதாசீனம் செய்வதற்குச் சமனானதாகும்.

அடுத்ததாக, சிறிலங்கா நீதித்துறையையே இராணுவம் அலட்சியம் செய்துள்ளது. தமது செயற்பாடுகளை நீதித்துறை கட்டுப்படுத்தவோ, அன்றித் தமது செயற்பாடுகளுக்கு நீதித்துறைக்கு விளக்கம் அளிக்க வேண்டிய அவசியமோ தமக்கு இல்லை என்பதை இராணுவத்தரப்பு வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, சட்ட ஒழுங்கிற்கு இராணுவம் கட்டுப்படப்போவதில்லை என்பதைக் காட்டியுள்ளது.

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் மனித உரிமைகளைப் பேணுமாறு சிறிலங்காவை தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றன. சிறிலங்கா அரசாங்கமும் இது தொடர்பாக சில நடவடிக்கைகளை எடுப்பதாகக் காட்டிக்கொள்கிறது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தினால் இது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என்பதற்கு இதுவொரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அதாவது இராணுவமே மனித உரிமை மீறல்களின் முக்கிய பங்காளிகள். அவர்கள் நாட்டின் தலைவரின் பணிப்புரைகளையோ அன்றி நீதித்துறை சட்டங்களையோ மதிக்கும் நிலையில் இல்லை. இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் விரும்பியோ அன்றி விரும்பாமலோ நீதித் துறையின் சட்டங்களை மதித்தோ அவர்கள் மனிதஉரிமை நடவடிக்கையைப் பேணப்போவதில்லை.

இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் எந்தவித சட்டங்களை ஆச்கினும் அல்லது அமுல் படுத்துவதாக உறுதி அளிப்பினும் அதனால் மனித உரிமைகள் பேணப்படப் போவதாகவோ அன்றி மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்கப்படப் போவதாகவோ இல்லை. அத்தோடு சலுகைகளையும், அதிகாரத்தையும் அனுபவித்துவிட்ட இராணுவம் நாட்டில் சமாதானம், அரசியல் தீர்வுகள் ஏற்படுவதற்கும் தடையாக உள்ளது. அண்மையில் சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்ட அமைச்சர் தொண்டமானின் முயற்சிகளை அரசாங்கம் ஒதுக்கியமைக்கு இராணுவத்தின் அழுத்தமும் முக்கியமான காரணமாகும்.

இவற்றைச் சர்வதேச உலகம், குறிப்பாக சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் விளங்கிக்கொள்ள வேண்டும். மனித உரிமை மீறல்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர சிறிலங்கா அரசாங்கத்தினால் இனி முடியப் போவதில்லை. இதனால் சிறிலங்காவிற்கான உதவியை நிறுத்த வேண்டும். இல்லையேல் சிறிலங்காவிற்கு வழங்கப்படும் உதவிகள் யாவும் இராணுவத்திற்கும் அது மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களுக்குமே வழங்கப்பட்டதாக அமையும்.

# பனிப்போர் முடிந்தாலும் புதிய கவலைகள் உள்ளன

## — டக்ளஸ் ஹேட்

(டில்லி)

பனிப்போர் குமுறல் முடிவடைந்து விட்டாலும் எதிர்த்து சமாளிக்க வேண்டிய புதிய கவலைகள் உருவெடுத்து வருகின்றன என்று பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சர் டக்ளஸ் ஹேட் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டு சென்றுள்ள டக்ளஸ்ஹேட் புது டில்லியில் செய்தியாளர்களிடம் இதுபற்றித்தெரிவித்தார். இந்தியத் தலைவர்களோடு இரு தரப்பு உறவுகள் மற்றும் பல தரப்பட்ட சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படும் என்றும்.

உலக நாடுகளில் குறிப்பாக முன்னாள் சோவியத் யூனியனில் மாற்றம் ஏற்பட்டு வரும் தருணத்தில் எனது இந்தியப் பயணம் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்றும் டக்ளஸ் ஹேட் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் பிரித்தானிய உள்துறை அமைச்சர் செனத் பேகரின் விஜயத்தை அடுத்து வெளியுறவுத்துறை அமைச்சர் இந்தியா வந்தமை ஒரு குறிப்பிடத் தக்க விடயம் என இந்திய ராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்துளனர்.

# 'போர்பஸ்' பேச்சுக்கள் வெளியிடப்படமாட்டாது

## சுவிடிஸ் அமைச்சரவை தீர்மானம்

(டில்லி)

போர்பஸ் பீரங்கி கொள்வனவு தொடர்பாக காலஞ் சென்ற பிரதமர்கள் ராஜீவ் காந்திக்கும், ஹல்வாவ் பார்மருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் விபரங்களை வெளியிடுவதில்லை என்று சுவிடிஸ் அரசு முடிவு செய்துள்ளது.

இந்த முடிவை சுவிடிஸ் அமைச்சரவை எடுத்துள்ளது. பேச்சுவார்த்தைகளின் விபரங்களை வெளியிடுவதால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும் என்று அமைச்சு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளின் விபரங்களை வெளியிட வேண்டுமென்று சுவிடிஷ் வெளியுறவு அமைச்சர் பலமுறை வலியுறுத்தியுள்ளார்.

# தமிழர்களை திரும்புமாறு பங்காரப்பா அழைப்பு

(மைசூர்)

கர்நாடகத்திலிருந்துசென்று தமிழகத்தில் தங்கியிருக்கும் தமிழ் மக்களை திரும்பி வருமாறு கர்நாடக முதலமைச்சர் எஸ். பங்காரப்பா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மைசூரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பங்காரப்பா தமிழ் மக்களின் இன்னல்களை உணர்ந்து அவற்றை தாம் பகிர்ந்து கொள்வதாகவும்,

அவர்களுக்கான நஷ்டஈட்டுத்தொகையினை தமது அரசாங்கம் வழங்குமென்றும், வீடுகளை இழந்தவர்களுக்கு இருபதினாயிரம் ரூபாய் நஷ்டஈட்டுத் தொகையாக வழங்கப்படுமென்றும்,

சிறுபான்மை மொழி பேசுபவர்களின் பாதுகாப்பிற்காக நாற்பது தனிக் காவல் நிலையங்கள் அமைக்கப்படுமென்றும் தெரிவித்தார்

இதேநேரம் கர்நாடகத்திலிருந்து தமிழகம் வந்துள்ள தமிழர்களின் எண்ணிக்கை இதுவரை 1,04,693 என தமிழக அரசு அறிவித்துள்ளது.

# சந்திரசேகரனின் கைது; மனித உரிமைமீறல் செயல்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

மலையக மக்கள் முன்னணி தலைவர் பி. சந்திரசேகரனின் கைது அடிப்படை உரிமைகள் களை மீறும் செயல் என சிறிலங்காவின் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சரத் சில்வா தெரிவித்துள்ளார்.

சந்திரசேகரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மூவர் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பில் இவ்வாறு அவர் தெரிவித்தார். சிறிலங்கா அரசியலமைப்பின் 126(3) விதியின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அவர்களது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக அவர் கூறினார். விசாரணை சிறிலங்கா உயர் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இம் மூவரும் கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலக குண்டு வெடிப்பு சந்தேக நபர்களுக்கு உதவினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 400 கைக்கடிகாரங்கள் வவுனியாவில் பறிமுதல்

(கொழும்பு)

வவுனியா ஊடாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர முற்பட்ட 400 கைக்கடிகாரங்களை இராணுவத்தினர் பறிமுதல் செய்தனர்.

இந்த 400 கைக்கடிகாரங்களையும் கொண்டுவர முற்பட்ட இரண்டு இளைஞர்களும் நான்கு தங்க பிஸ்கட்டுக்களையும் வைத்திருந்தனர். கடந்த 14 ஆம் திகதி இந்த இரு இளைஞர்களும் கடிகாரங்களையும பிஸ்கட்டுக்களையும் வடபகுதிக்கு கொண்டுவருவதற்கு எத்தனித்தனர்.

கடிகாரங்களுடன் இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

---

### சிறிலங்காவின்

இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தத் தீர்மானித்திருப்பது குறித்து இந்நாடுகள் அதிருப்தியும் ஏமாற்றமும் தெரிவித்துள்ளன.

---

### லில்லி

ம்பிலிருந்து புறப்படும் என அறிவிக்கப்படுகிறது.

பாடப்புத்தகங்கள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கும், உணவுப் பொருள்கள் யாழ். அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

### பாரிஸில்

பணத்தையும் பெறும் பொருட்டே லோகேந்திரனையும் கடத்தியதாகவும் இவர்களில் நால்வர் இக்கடத்தலில் முழுமையாக சம்பந்தப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக்கும்பல் கடத்திய இளைஞனின் மாமானரையும் அடித்துதுன்புறுத்தி 3000 பிராங் தமக்கு தருமாறு தாக்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### கடல்

கச்சாய் துறைமுகத்தை வந்தடைந்ததாகவும் அந்த இளைஞர் தெரிவித்தார்.

இந்த இளைஞர் காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிக்குத் தப்பி குடும்பத்தினருடன் கொடிகாமத்தில் வசித்துவந்தவராவார். (86)

---

### கப்பலில்

★ நைற் அன்டே 8 75 ,,
★ சுவேந்திரா 8 00 ,,
★ பேபி சோப் 8.60 ,,
★ றின்சோ 550 கிராம் பை 37.50 ,,

கொப்பி வகைகுறித்தவிலையில் இருந்து சதம் 25 குறைவு

---

### கொக்கட்டிச்

இத்தாக்குதலில் ஒரு சமூக விரோதி கொல்லப்பட்டார். பல ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

இத்தாக்குதல் நேற்றுக் காலை 9.20 மணிக்கு இடம் பெற்றது. குருமண் வெளியைச் சேர்ந்த தும்பு என்ற தேசத்துரோகியே இத்தாக்குதலில் பலியாகியவர் ஆவார்.

இவரிடமிருந்து ரி-56-1 ரக துப்பாக்கி ஒன்று, அதற்குரிய ரவைக்கூடுகள் 6, 7.6 நடுத்தர ரவைகள் -175, ஜே ஆர். கைக்குண்டு ஒன்று என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

---

### இனப்பிரச்சினை

★ சமாதானத்துக்கான நிபந்தனைகளை வெளியிட்டு பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்தல்.

★ மத்தியஸ்தம் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு ஒழுங்குகளை வெளிப்படுத்துதல்

★ சிறுபான்மைச் சமூகத்தினரதும் பெரும்பான்மை சமூகத்தினரதும் உரிமைகளை நியாயமான முறையில் புரிந்துணர்வுடன் அங்கீகரித்தல்.

★ பிரச்சினைக்குரிய விடயங்கள் குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல்.

★ அடக்குமுறைச் சட்டங்கள் மற்றும் அவசர காலச் சட்டத்தை நீக்கி, நாட்டின் சாதாரண சட்டத்தை மீளக் கொணர்வதோடு ஜனநாயகத்தை நிலைபெறச் செய்தல்.

★ வாழ்க்கைச் செலவைக் குறைத்தல்.

★ பொருளாதார வகையில் பின்தங்கிய அனைத்துச் சமூகங்களுக்கும் உதவும் வகையில் மாற்றுப்பொருளாதார முறைகளைத் தேடுதல்.

★ அனைத்துத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தல்.

★ பெண்கள், குழந்தைகள் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தல்.

இந்த தீர்வுத் திட்டத்தில் வண.திஸ்ஸ பாலசூரியா, தம்மலோக்க தேரோ, குருணாகலை ஆயர் அன்றூ குமாரகே, மெதடிஸ்த திருச்சபைத் தலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக விமான சேவையில் விமானப்படை விமானங்கள்

(கொழும்பு)

கடந்த வாரம் சென்னை விமான நிலையத்தில் பி.737 விமானம் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து திருவனந்தபுரத்திற்கும் திருச்சிக்கும் விமான சேவைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதன் விளைவாக எயர் லங்க நிறுவனத்துக்கு பெருமளவு நஷ்டமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதை நிவர்த்தி செய்யும் பொருட்டும், போயிங் விமானம் திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் வரைக்கும் இலங்கை விமானப்படை புதிதாக வாங்கிய இரு அவ்ரோ விமானங்களை எயர்லங்கா பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.

## நீர்ப்பாய்ச்சல் குளத்தை மூடி கட்டடம் அமைக்க முயற்சி

சளுவாஞ்சிக்குடியிலுள்ள வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சும் குளத்தை மூடி அவ்விடத்தில் நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடங்களை அமைக்க முயற்சி செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. காலாகாலமாக இப்பகுதி மக்களின் வாழ்க்கைக்கு இக் குளங்கள் பயன்பட்டு வந்தன. குளத்தை மூடுவதற்கு பெருந் தொகைப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 6ஆம் மாத நினைவஞ்சலி



### மேஜர் சேரன்

(சண்முகம் றோய் செழியன்)

வீர மண்ணில் 16-11-1969 — வீரச்சாவு 21-07-1991

தமிழீழ மண்ணுக்காகப் போராடி
உன்இன்னுயிர் கொடுத்தஉத்தமனே!
நீ மறைந்து விட்டாலும் உனது
எண்ணங்கள் என்றென்றும்மறையாது!
நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்தம்
சேரனே
நின் இலட்சியங்கள் வாழ்வின்
ஒளி விளக்கு,
நீ சென்ற பாதையில் நாமும் சென்று
நிச்சயம் தமிழீழம் மலர்விட்போம்!
- இது உறுதி!

சாவகச்சேரி. -உறவினர்கள்
(2117) நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### அப்பாப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

அப்பாப்பிள்ளைசுந்தரம்பிள்ளை (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்) 16-01-92 இல் காலமானார். இவர் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், வசந்தரூபி, செல்வரூபி, திருநாதன் (வீரகேசரி, கொழும்பு)விஜயலட்சுமி (இலங்கை வங்கி, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவானந்தநாதன், மகேசன், (அரசினர் வைத்தியசாலை, புத்தளம்) கலைமகள், சிவபாதசுந்தரம் (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகா, மயூரன், செந்தூரன், நித்திகா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 19-01-92 காலை 11-00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூணாமலை வீதி, மானிப்பாய். — தகவல்: மனைவி, பிள்ளைகள்
(2116)

# பாக். மிராஜ் விமானங்கள் விற்க பிரான்ஸ் இணக்கம்

(பாரிஸ்)

மிராஜ்-2000 ரக 40 போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பதற்கு பிரான்ஸ் கொள்கையளவில் இணங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் பிரதமர்நவாப் ஷெரிப்பிற்கும் பிரெஞ்சு அதிபர்மித்ரோங்கிற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்பு இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாகிஸ்தானால் 40 விமானங்களுக்கும் உரிய முழுப்பணத்தையும் செலுத்த முடியும் என தாம் நம்பவில்லை என பிரெஞ்சு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பத்து விமானங்களுக்கு முழுப்பணத்தையும் செலுத்த முடியும் என நவாப் ஷெரிப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பிரான்சிடமிருந்து 3 கண்ணிவெடியகற்றும் கப்பல்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தமொன்றை செய்து கொண்டுள்ளது. இந்த மூன்று கப்பல்களினதும் பெறுமதி 130 கோடி டாலர்களாகும். மேலும் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களையும் அது பிரான்சிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் அணு குண்டு செய்திருப்பதை காரணம் காட்டிஅமெரிக்காவிடமிருந்து எவ் - 16 ரக யுத்த விமானங்களை வாங்குவதாக இருந்த ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு, விமானங்கள் உட்பட இதர ஆயுத விற்பனைகளையும் அமெரிக்கா தடைசெய்திருந்தது.

இந்தப் பேரம் ரத்துச் செய்யப்பட்ட நாளில் இருந்து பாகிஸ்தான் மாற்று விமானங்களை தேடி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே பாகிஸ்தான் வைத்திருக்கும் எவ் -16 ரக விமானங்களுக்கு அமெரிக்காவிடமிருந்து உதிரிப் பாகங்கள் கிடைக்காமையால் அவை தரையிறக்கப்பட்டுவிட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

திரு. ஷெரீப்புடன் பாரிஸ் சென்றுள்ள பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல்பாரூக்பெரோஸ்கான் இந்த விமானக் கொள்வனவு குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இந்த விமானங்கள் வாங்குவதற்கான முடிவு செயற்படுத்தப்பட முன்னர் தொழில் நுட்பக் கோணத்தில் இந்த வியாபாரம் மதிப்பிடப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

### வாவியில்

அதிபர் ஆ. பரமானந்தம், அவருடைய மகனான கமலஹாசன் உட்பட மூவர் பலியகினர்இதில் பயணம் செய்த 8 பேர் தப்பி விட்டனர்.

மட்டக்களப்பு வாவியிலுள்ள ஓடத்துறைகள் அனைத்திலும் சிறிய கண்ணாடி இழைப்படகுகளே சேவையில் ஈடுபடுவதால் அடிக்கடி இவ்வாறான விபத்துகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### புதிய

றார். பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் சிறப்புரை நிகழ்த்தும்போது மேற்படி நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் அலசி ஆராய்ந்து நூலின் சிறப்புக்களையும், புதிய நோக்கிலான போக்கையும் தமக்கிருந்த சில முரண்பாடுகளையும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து ஆய்வுரை நிகழ்த்திய குமாரவேலு இனப் பிரச்சினையை புதிய கோணத்தில் ஆராய முற்பட்ட ஆசிரியர் இனப்பிரச்சினை தொடர்பாக புதிய கருத்துக்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறார் என்றார்.

சிவா சுப்பிரமணியம் சிறப்புரை நிகழ்த்தும் போது, நூலில் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய சில வரலாற்று ஒழுங்கமைப்புக்கள் பற்றிக் கூறி, சிங்கள அரசின் தவறான வரலாற்று ஆவணங்களைக் கடுமையாகச் சாடினர்.

இறுதியில் நூலாசிரியர் மு. திருநாவுக்கரசு தனது ஆசிரியருரை நிகழ்த்தும்போது, நிகழ் காலத்திலிருந்து எதிர் காலத்தைப் பற்றி மனித உலகம் சிந்தித்து செயலாற்றிவரும் தற்போதைய காலகட்டத்தில் பரந்த சர்வதேசப் பார்வை மற்றும் எமது சமூகத்தின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நூலை ஆக்கியுள்ளேன். இந்நூல் தொடர்பான சர்ச்சைகள், வாதப் பிரதிவாதங்கள் புதிய சிந்தனைகளை உருவாக்க வழி வகுக்கும் என்றார். (க)

### இராணுவத்தின்

யானார் எனதெரிய வருகிறது.

அவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டபோது எவராலும் அடையாளம் காணப்படாமையால் அங்கேயே தகனஞ்செய்யப்பட்டதாகதெரிவிக்கப்படுகிறது.

### இனப்பிரச்சினை

வர் வண. கிங்சிலிமுத்தையா, கொழும்பு ஆயர் அதி, வண. ஜே. ஞானப்பிரகாசம், டாக்டர்கார்லோ பெர்னான்டோ, குமார் பொன்னம்பலம், கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கே. பி. சில்வா, சிறிலங்கா மக்கள் கட்சி செயலாளர் வை பி. சில்வா, லங்கா சமசமாஜக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அத்தாவுட செனிவரெட்ண உட்பட இன்னும் பலர் கைச்சாத்திட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சுப்பிரமணியம்

கார்த்திகேசு சுப்பிரமணியம்(இளைப்பாறிய R.M.P) 18-1-92 இல்காலமானார். இவர் திருமதி செல்லம்மா பொன்னுத்துரை, திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி, திருமதி தங்கம்மா வைத்தியலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை, சாவ டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரர் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 19-1-92ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்'
சங்கத்தானை, திருமதி செ. பொன்னுத்துரை
சாவகச்சேரி (2119) (சகோதரி)

### திரு. இராமு - தம்பு

கொக்குவில் கிழக்கு அம்பகர் வீதியைச் சேர்ந்த திரு. இராமு - தம்பு (18-01-92) நேற்று சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு, காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், நேசம்மா, காலஞ்சென்ற தங்கம்மா, கதிரமலர், நீலாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், அப்புத்துரை பொன்னுத்துரை (C.T.B. சாரதி) காலஞ்சென்ற சிங்கராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், அருள்காந்தன் (மருத்துவபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) சிறிகாந்தன்(சுவிற்சலாந்து), தயானந்தன்(ஜேர்மனி), றசிதா சுஜாத்தா, சுசீதா, சுதாகரன், பார்த்தீபன் (சுவிற்சலாந்து), சுபாசினி, ஜெகதீசன், ஜெகதீபன், தர்மினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக (19-01-92) இன்று நண்பகல் 12 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[2118] பொன்னுத்துரை (மருமகன் CT3)

## மொழிபெயர்ப்பாளர் தேவை

தொழில் நுட்பவியல் சார்ந்த விஷயங்கள் தமிழில் மொழி பெயர்க்கும் ஆற்றலுள்ளோர் தேவை.

உடன் தொடர்பு கொள்க:

**அம்பலவாணர்,**
ஆடிய பாதம் வீதி,
(கொக்குவில் வீதி)
திருநெல்வேலி வடக்கு
திருநெல்வேலி.

(2114)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.